Koviloor Digital Library பக்கம் 3

ஓம் தத் சத்.

திருப் பூவணத்தில்,

சாது சங்க மகா சபைக் கூட்டம்.

ஓர் அன்பரால் எழுதி வெளியிடப்பட்டது.

நிலைய வெளியீடு] 1951. [திருப் பூவணம்.

கர வருஷம் புரட்டாசி மாதம் 29 தேதி.

உ

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம:

சாது சங்க மகா சபைக் கூட்டம்

திருப் பூவணம்.

"நிகரறுசந் தோடவமு தமையப் பெற்றோ னெடும்போக நஞ்சாமந் நிறைசந் தோடம், அகலுறவா ணையில்விழுநெஞ் சறிவை நோக்கி லழுக்குறுகண் ணாடியிலா நகம்போற் றோன்றும், மகிழ்குணமெய் தியபுருட மகிமை யோனை மாதவரும் நராதிபரும் வணங்கா நிற்பர், சகமெனுமா னையைவெல்லத் தக்கோர்க் கெல்லாந் தப்பாத சகாய மாஞ் சாது சங்கம்." (வாசிட்டம் 2 முமுக்ஷுப் பிரகரணம் கவி 19) என்று கூறியிருக்கிறபடி சாது சங்கப் நிறைவப் பெற்று, சாது சங்க மகா சபைக்கு எற்பாடு செய்யப் பெற்றது.

Koviloor Digital Library

கர வருஷம் புரட்டாதி மாதம் 26வ வெள்ளிக் கிழமைக்குச் சரியான 1951 வருஷம் அக்டோபர் மாதம் 12 தேதி பகல் இரண்டு மணிக்குத் திருப் பூவணம் வேதாந்த மடத்தில், சாது சங்க மகா சபைக் கென அமைத்த கொட்டகையில் அடியிற் கண்ட பதினான்கு அங்கத்தினர்களும் கூடினார்கள். அஜெண்டாவில், "சங்கத்தில் சிரத்தை யில்லாமையினாலும், பணம் கொடுக் காமையினாலும், மேலும் சங்கம் வேண்டுமா" என்னும் விஷயம் தான் போட்டிருந்தது.

சிலர் சங்கத்தைக் கலைக்கும் சுருங்கிய நோக்கத்தோடும், சிலர் சங்கம் நீடூழி யிருக்க வேண்டும் என்னும் பரந்த நோக்கத்தோடும், இரு பிரிவின ராக வந்திருந்தனர்.

சபை ஆரம்பம் ஆயிற்று, காரிய தரிசி பொக்கிஷதார் ராஜீ நாமாவைப் பேச வேண்டும் என்றார் ஒரு சாரார். திருக் களர் ஸ்ரீ கிருஷ்ணானந்த சுவாமிகள் அஜெண்டாவில் வெளியிட்ட விஷயத்தைப் பேசி முடித்த பின் சபை கலையாமல் ஜீவித்திருந்தால் அதன் பின் ராஜீ நாமாவை யோசிக்கலாம் என்றார்கள். அதற்கு மறு மொழி ஒருவரும் கூறாமல், "பணம் கொடுக் காதவர்கள், கர வருஷம் புரட்டாதி மாதம் 26வ முதல் ரூபாய் நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு பத் தணா வட்டி வீதம் யாவரும் வட்டியும், அசலும் சேர்த் துச் செலுத்தவேண்டும்" என்றும், "அசலோ வட்டியோ செலுத்திய அங்கத்தினர்கட்குத் தான் மறு கூட்டத்திற்கு வரும் போது ரயில் சார்ஜ் கொடுக்கப்படும்" என்றும் தீர்மானம் நிறைவேறியது. பொக்கிஷதார் - காரிய தரிசி ராஜீ நாமாக்களும் அங்கீகரிக்கப்பட்டன. புதிய பொக்கிஷதா ரும், காரிய தரிசியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரவு பத்து மணிக்குச் சபை முடிவு பெற்றது. உடனே அங்கத்தின ரும், ஏனையரும், தங்கள் தங்கள் இடங்கட்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அன்று வந்த அங்கத்தினர் பதினான்கு பெயர்கள். உதவியாளர் இருபத்தைவர் ஆக முப்பத்தொன்பது பெயருக்கும் திருப் பூவணம் வேதாந்த மடத்தில், சாது சங்கத் தலைமை ஸ்தானம் இருப்பதால், மகா சபை கூட்ட அனுமதித்து உணவு உறையுள் ரூபாய் எழுபத்தெட்டு வரைச் செலவு செய்து திருப் பூவண மடத்தார் நடத்துவித்தார்கள்.

திருப் பூவண நாதர் கிருபையினால் அழிக்கும் எண்ணம் மாறி, ஆக்கும் எண்ணம் உதய மானது போற்றத் தக்கதே. பாலாரிஷ்டம் நீங்கின

Koviloor Digital Library

தும் பாராட்டத்தக்கதே. மகா சபைக்கு வாராத அங்கத்தினர்கட்கு விஷயம் தெரியும்படி செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். சிலருக்கு முன்னர் மனத்தில் வேறுபட்டிருப்பினும் பின்னர் மனநிலை சாந்தப்பட்டுச் சந்தோஷமாக யாவரும் சென்றது என்றும் நினைவில் இருத்தற் குரிய தாகும். "கணத்தில் போம் மனத்தில் பற்றூர்." என்று கைவல்ய நவநீதம் கூறிய படியே நடந்தது சிவச் செயல் தான்.

சாது சங்க மெம்பர்கள் 14.

1. திருப்பூவணம் ஸ்ரீ காசிகாநந்த ஞானாசார்ய ஸ்வாமிகள். 2. மதுரை கு மடம் ஸ்ரீ அருணாசல சுவாமிகள். 3. மதுரை பிர மடம் ஸ்ரீ சின்மயாநந்த சுவாமிகள். 4. சென்னை ஸ்ரீ அகண்டாநந்த சுவாமிகள். 5. திருவாரூர் ஸ்ரீ ஷண்முகாநந்த சுவாமிகள். 6. திருவண்ணாமலை ஈ மடம் ஸ்ரீ இராமநாத சுவாமிகள். 7. திருக்கனூர் ஸ்ரீ கிருஷ்ணாநந்த சுவாமிகள். 8. திருச்சிராப்பள்ளி ஸ்ரீ அத்வைதாநந்த சுவாமிகள். 9. தஞ்சாவூர் பால் சாமி மடம் ஸ்ரீ வாசுதேவ சுவாமிகள். 10. மேட்டுப்பாளையம் ஸ்ரீ இராமாநந்த சுவாமிகள். 11. இராமேசுவரம் ஸ்ரீ சிவாநந்த சுவாமிகள். 12. இராமநாதபுரம் ஸ்ரீ இராமாநந்த சுவாமிகள். 13. திருவையாறு ஸ்ரீ சிதநாராயண சுவாமிகள். 14. திருப்பரங்குன்றம் ஸ்ரீ பரமாநந்த சுவாமிகள்.

மெம்பர் அல்லாதவர் 25.

1. மதுரை சிதாநந்த சுவாமி 1. 2. திருப்பரங்குன்றச் சுவாமி 1. 3. முத்தையா சுவாமி (திருப்பூவணம்) 1. 4. பழநி ஐயா (திருவாரூர்) 1. 5. ரங்க சாமி ஐயா (திருப்பூவணம்) 1. 6. சுந்தர முதலியார் (மதுரை) 1. 7. மதுரை டிரைவர் 2 (குட்டையா மடம்) 8. தெலுங்கு சாது 1. 9. சௌராஷ்டிர் 4 (இராமாநந்த சாமி சம்பந்தம்) 10. நாகரத்தினம் பிள்ளை 1. 11. மாணிக்கம் பிள்ளை 1. 12. சமையல்காரன் 3. 13. பாத்திரம் விளக்குகிற ஆள் 2. 14. தொத்தன் (கொட்டகை) 1. 15. வயிரவன் சேர்வை 1. 16. காதர் 1. 17. வண்ணான் 1. 18. பசு மேய்க்கிற கோனான் 1. ஆக இனம் 25 ஆக 39 பெயர்.

பிராக்ஸி 3.

1. திருக்கழுக்குன்றம் ஸ்ரீ ஓம் நம சிவாய சாமிகள் பிராக்ஸி.
2. திருவாரூர் ஸ்ரீ சங்கராநந்த சாமிகள் பிராக்ஸி.
3. ஏகாம்பரக் குப்பம் ஸ்ரீ கோவிந்த சாமிகள் பிராக்ஸி.

Koviloor Digital Library

Acc. No. 26514
24-4

செலவு இனம்	ரூ.	அ.
அரிசி படி 8க்கு	10	0
மிளகாய் பொடி வீசை ¾க்கு	1	4
மிளகாய் வற்றல் வீசை ½க்கு	1	0
தொன்னைக் கட்டு 1க்கு	0	6
தேங்காய் 5க்கு 1 2 0 அப்பளம் 100க்கு	1	0
வாழைப் பழம் 50க்கு	1	2
பெருங் காயம் பலம் ½க்கு	0	2
கடலை படி 0 6 6க்கு	0	8
கடலை மா வீசை ½க்கு	0	5
உளுந்தம் பருப்பு படி 1க்கு	1	4
சீனி வீசை 1க்கு 2 8 0 வாசனைச் சாமான்	0	2
வெல்லம் வீசை 2க்கு	1	14
துவரம் பருப்பு படி 1½க்கு	1	2
கடலை எண்ணெய் படி 2க்கு	6	0
பசு நெய் படி ¼க்கு	2	8
பால் படி 5க்கு 5 0 0 தயிர் படி 1க்கு	0	8
கோதுமை மா படி 2க்கு	2	0
மிளகு-சீரகம்-கடுகு-வெந்தயம்	0	12
உப்பு படி 1½க்கு 0 2 0 விறகு	3	0
பாத்திரம் விளக்கின ஆள் 1க்கு கூலி	0	8
கல்லல் சமையல் ஆள் 2க்கு சம்பளம் நாள் 1க்கு	6	0
கல்லல் போக வர இனம் 2க்கு ரயில் சார்ஜு	4	12
செட்டியாருக்கு ரயில் பலகாரம்	0	8
கொட்டகை போட்ட கூலி	7	0
சோத்து வடை 50க்கு	1	0
ஏலரிசி 0 2 0 திராக்ஷை	0	2

செலவு இனம்	ரூ.	அ.
முந்திரிப் பருப்பு	0	4
பெட்ரூமாக்ஸ் லைட் 1க்கு விளக்கு 1க்கு	1	0
வாழை இலை 100க்கு	1	0
வாழைக் காய் 50க்கு	0	12
பச்சை மிளகாய் வீசை 1க்கு	0	10
இஞ்சி பலம் 1க்கு	0	2
தக்காளி வீசை 5க்கு	1	4
முள்ளங்கி வீசை 1க்கு	0	4
கொத்தவரைக் காய் வீசை ½க்கு	0	3
பூசணிக்காய் 1க்கு 0 6 0 பலக்காய் 2க்கு	0	7
கத்தரிக் காய் வீசை 2க்கு	0	14
புடலங்காய் 4க்கு	0	4
இலுமிச்சம் பழம் 16க்கு	0	4
பச்சை கொத்து மல்லி 0 1 0 கூலி	0	3
மதுரை போய் வரத் தடவை 2க்கு ரயில் சார்ஜு	1	8
பொரி கடலை படி ½க்கு	0	4
புல் வெட்டின ஆள் 1க்கு	0	8
வாழைத் தண்டு 4க்கு கூலி உள்பட	0	8
கிள்ளு வற்றல் படி அரைக்கு	0	6
சாம்பார் பவுடர் பவுண்டு ½க்கு	1	14
கறி வேப்பிலை வீசை ½க்கு	0	2
வெங்காயம் வீசை 1க்கு	0	7
சேனைக் கிழங்கு வீசை 1க்கு	0	8
மஞ்சள் பலம் 1¼க்கு 0 2 0 குங்குமப் பூ	0	4
ஆக வகை 58க்கு ரூபாய்	78	0